இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 13-08-2025

# மோ(ச)டி தேர்தல் ஆணையம்!

பிரதமர் நரேந்திர மோடியின் நாற்காலியைப் பிடித்து ஆட்டி இருக்கிறார் ராகுல் காந்தி. வாக்குத் திருட்டு' மூலமாக 'திருட்டு வெற்றி'யை பா.ஜ.க. பெற்றிருப்பதாக ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார். பிரதமரும் உள்துறை அமைச்சரும் வாய்மூடிக் கிடக்கிறார்கள். போலித் தேர்தல் அம்பலமானதை மவுனத்தால் மறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகஸ்ட் 7 ஆம் தேதியன்று இந்திய நாட்டின் முக்கியமான ஊடகங்கள் அனைத்தையும் அழைத்து படம் போட்டுக் காட்டிவிட்டார் ராகுல் காந்தி. 'மோசடித்தனமான' தேர்தலை, 'மோசமான' முறையில் தேர்தல் ஆணையம் 'முறையாக' நடத்திக் காட்டி இருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டினார் ராகுல் காந்தி.

**1. கர்நாடகாவில் உள்ள மத்திய பெங்களூரு நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மகாதேவபுரா சட்டமன்றத் தொகுதியில் 1 லட்சத்து 250 வாக்குகள் திருடப்பட்டுள்ளது. போலி வாக்காளர்கள், இல்லாத முகவரிகள், ஒரே முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள், செல்லாத புகைப்படங்கள், படிவத்தின் 6-இன் தவறான பயன்பாடு ஆகியவற்றால் இந்த மோசடி நடந்துள்ளது.**

**போலி வாக்காளர்களாக 11,965 பேர் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தவறான முகவரி கொடுத்தவர்களாக 40,009 பேர் உள்ளனர். ஒரே முகவரியில் 10,452 பேர் இருக்கிறார்கள். 4,132 வாக்காளர்களுக்கு நிழற்படம் இல்லை. படிவம் 6 ஐ தவறாகப் பயன்படுத்தி இருப்பவர்களின் எண்ணிக்கை 33,692 ஆகும்.**

**2. ஐந்து மாதங்களில் அதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 18 வயதுக்கு மேற்பட்ட மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது. வாக்குப்பதிவு நாளில் மாலை ஐந்து மணிக்குப் பிறகு திடீரென வாக்குப்பதிவு அதிகரித்தது.**

**3. தேர்தல் ஆணையம் வாக்குப்பதிவு தொடர்பான ஆவணங்களை வழங்காமல் காலம் தாழ்த்துகிறது மற்றும் சிசிடிவி காட்சிகள் போன்ற ஆதாரங்களை அழிக்கிறது.**

**4. படிவம் 6 - தவறாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் படிவம் இது. இந்தப் படிவத்தைப் பயன்படுத்துவோர் வயது வரம்பு பெரும்பாலும் 18 - 25 வயதாக இருக்கும். ஆனால் இந்த வயதில் எவரும் இல்லை. 8,97,85,75 வயதுகளில் பலரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். 70 வயது மூதாட்டி ஒருவர் தனது பெயரை இரண்டு வாக்குச் சாவடிகளில் சேர்த்திருக்கிறார். இரண்டு இடத்திலும் அவர் வாக்களித்துள்ளார்.**

**5. மகாதேவபுரா தொகுதியில் மட்டும் ஒரே வாக்காளர், வாக்காளர் பட்டியலில் வெவ்வேறு பூத் எண்களின் கீழ் வருகிறார். ஒரே வாக்காளர் வெவ்வேறு மாநிலங்களின் வாக்காளர் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளார்.**

**6. வாக்குகளைத் திருட தவறான முகவரிகளில் உள்ள பல போலியான வாக்காளர்கள் பயன்படுத்தப் பட்டுள்ளார்கள். முகவரிகள் இல்லை அல்லது முகவரி வர வேண்டிய இடங்களில் "0" என்று இருக்கிறது.**

**7. ஒரே முகவரியில் அதிக அளவிலான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். 80 பேர் வசிப்பதாக ஒரே வீட்டின் முகவரி உள்ளது. ஆனால் அந்த முகவரியில் அப்படி யாரும் இல்லை. ஒரே ஒரு படுக்கை அறை கொண்ட வீட்டில் 46 பேரின் பெயர் இருக்கிறது. ஒரே வாக்காளருக்கு நான்கு வாக்குச் சாவடிகளில் வாக்கு இருக்கிறது. கர்நாடகாவில் ஒரு நபர், பல பூத்துகளில் வாக்களித்துள்ளார். ஆதித்யா ஸ்ரீவத்சவா என்பவருக்கு மகாராஷ்டிராவில் ஒரு வோட்டும், உத்தரப்பிரதேசத்தில் ஒரு வோட்டும், பெங்களூரு மகாதேவபுரத்தில் இரண்டு வோட்டும் இருக்கிறது.**

**8. ஒரே ஒரு தொகுதியில் நடந்த மோசடியைக் கண்டுபிடிக்க ஆறு மாதம் ஆகிவிட்டது. தேர்தல் ஆணையம் எங்களுக்கு மின்னணு தரவை வழங்கவில்லை. நாங்கள் இதனை ஆராய்வதை தேர்தல் ஆணையம் விரும்பவில்லை. மின்னணு தரவை தந்தால் முப்பது விநாடியில் மொத்த தவறையும் கண்டுபிடித்துவிடுவோம். அதேபோல் சிசிடிவி காட்சிகளைப் பார்க்கவும் அனுமதிக்கவில்லை. வாக்குத் திருட்டு மோசடியை மறைக்க தேர்தல் ஆணையம் முயற்சிக்கிறது.**

**9.வாக்குப்பதிவு கருவிக்கு முன்பாக இந்தியாவில் அனைவரும் ஒரே நேரத்தில் வாக்குச் சீட்டு மூலம் வாக்களித்திருந்தனர். ஆனால் இப்போது தேர்தல்கள் மாதக்கணக்கில் நடக்கின்றன. எதற்கு இத்தனை கட்டங்களாக தேர்தல்கள்? அட்டவணை திடீரென மாற்றப்படுகிறது. இவை அனைத்தும் தேர்தல் நடைமுறையை கட்டுப்படுத்தவே மேற்கொள்ளப்படுகிறது.**

**10. நான் சொல்லும் வாக்குத் திருட்டுகள் ஒரே ஒரு தொகுதியில் மட்டும் நடைபெறவில்லை, பல இடங்களில் இப்படி நடந்துள்ளது. பா.ஜ.க.வுடன் கூட்டுவைத்து அக்கட்சி வெல்வதற்கு உதவ வாக்குத்திருட்டில் தேர்தல் ஆணையம் ஈடுபடுகிறது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. 25 தொகுதிகளில் 33,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றது. ஆட்சியில் இருக்க நரேந்திர மோடிக்கு 25 இடங்கள் தேவைப்பட்டது. அதனால்தான் தேர்தல் ஆணையம் எங்களுக்கு டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை வழங்கவில்லை. இத்தகைய வாக்குத் திருட்டின் மூலம் ஜனநாயகம் அழிக்கப்படுகிறது.**

- இவைதான் ராகுல் காந்தி எழுப்பிய கேள்விகள். இதற்கு இதுவரை தேர்தல் ஆணையம் முறையான பதிலைச் சொல்லவில்லை.

ராகுல் காந்தி தவறாக வழிநடத்துவதாக தேர்தல் ஆணையம் பதில் அளித்துள்ளது. ராகுல் சொன்ன பகிரங்க குற்றச்சாட்டு எதற்கும் நேரடியான பதில் இல்லை. பா.ஜ.க.வின் நாலாந்தரப் பேச்சாளரைப் போல பதில் சொல்கிறது தேர்தல் ஆணையம். 'பிரமாணப் பத்திரம்' எடுத்துக் கொண்டு ராகுல் இதனைச் சொல்ல வேண்டுமாம். தேர்தல் ஆணையம் சொல்கிறது. மக்கள் மன்றத்தில் சொல்லி இருக்கிறார் ராகுல். இதனை விட வேறு என்ன வேண்டும்?

'நான் சொல்வதற்கு நான் பொறுப்பேற்கிறேன்' என்பதை உறுதி செய்துள்ளார் ராகுல். இதை விட வேறு என்ன வேண்டும்?

கடந்த நான்கு ஆண்டு காலமாக தேர்தல் ஆணையத்தை தனது கைப்பாவையாக மாற்றியது மோடி அரசு. அதன் விளைவுகளைத்தான் 2024 தேர்தலில் நாம் பார்க்கிறோம். தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையில் தேர்தல் நடந்தால் நியாயமான தேர்தலாக அது இருக்காது. உச்சநீதிமன்றம் இதில் தலையிட வேண்டும்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.08.2025) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நேரு வீதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடுமலை நகர தி.மு.க. அலுவலகமான தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல. பத்மநாபன், நகர மன்றத் தலைவர் மத்தின் மற்றும் நகரச் செயலாளர் வேலுச்சாமி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மக்களாட்சியை அழிக்கும் வாக்குத் திருட்டு முறைகேடு:

# சுதந்திரமான விசாரணை நடத்தவேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 13 -**

**"நமது மக்களாட்சியை அழிக்கும் செயலான வாக்குத் திருட்டு முறைகேடு குறித்து சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

தேர்தல் ஆணையத்தை பாரதிய ஜனதா கட்சி தனது தேர்தல் தில்லுமுல்லுகளுக்கான அமைப்பாக மாற்றிவிட்டது. பெங்களூரின் மகாதேவபுரா தொகுதியில் நடைபெற்றது ஏதோ நிர்வாகக் குளறுபடி அல்ல, மக்கள் அளித்த தீர்ப்பைத் திருடுவதற்கான திட்ட மிட்ட சதி.

எனது சகோதரரும் மக்களவை எதிர்க் கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள் முன்வைத்துள்ள வாக்குத் திருட்டு ஆதாரங்கள் எந்த அளவுக்கு இந்த முறை கேடு நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை அம்பலப் படுத்தியுள்ளது. இன்று (11.8.2025) ராகுல் காந்தி அவர்கள் தலைமையில் 'இந்தியா கூட்டணி' நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்து தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கிப் பேர ணியாகச் செல்லவுள்ள நிலையில், பின்வ ரும் கோரிக்கைகளை வலியுறுத்துகிறோம்.

**கணினியால் படித்தறியக் கூடிய வடிவத்தில் அனைத்து மாநிலங்களின் வாக்காளர் பட்டியல் கோப்பும் உடனடி யாக அளிக்கப்பட வேண்டும்;**

**அரசியல் நோக்கத்தோடு வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்கு வது நிறுத்தப்பட வேண்டும்; மற்றும்,**

**நமது மக்களாட்சியை அழிக்கும் செயலான இந்த வாக்குத் திருட்டு முறைகேடு குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.**

இந்தப் போராட்டத்தில் தி.மு.க. உறுதி யாக உடன் நிற்கிறது. இந்திய **மக்களாட்சி யைப் பட்டப்பகலில் பா.ஜ.க. திருடிச் செல்வதைப்** பார்த்துக்கொண்டு நாங்கள் அமைதியாக இருக்கமாட்டோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ரூ.1,426.89 கோடியில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

# 19,785 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

### உடுமலைப்பேட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**திருப்பூர், ஆக. 13 -**

**திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1,426.89 கோடி மதிப்பீட்டி லான 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 19,785 பயனாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.08.2025) திருப்பூர் மாவட்டம், உடு மலைப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழா வில், 949 கோடியே 53 இலட்சம் ரூபாய் செல வில் 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 182 கோடியே 06 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டி லான 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 295 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப் பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 19,785 பயனாளிகளுக்கு வழங்கினார்.

**திருப்பூர் மாவட்டத்தில் திறந்து வைக்கப் பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்:**

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்,** திருப்பூர் மாநகராட் சியில் விடுபட்ட பகுதிகளில் 798 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் பாதாள சாக்கடை பணிகள்;

திருப்பூர் கோவில்வழி பகுதியில் 34 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம்;

மூலனூர் பேரூராட்சி, அண்ணாநகரில் 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் மேம்ப டுத்தப்பட்ட வாரச்சந்தை;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்,** திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங் களில் பொதுசேவை மையக் கட்டடங்கள், உணவு தானியக் கிடங்குகள், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், ஊராட்சிமன்ற அலுவல கக் கட்டடங்கள், நியாய விலைக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள், உணவு சேமிப்புக் கிடங்கு, அங்கன்வாடிக் கட்டடங்கள், வட்டார சுகாதார நிலையம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி களில் வகுப்பறைக் கட்டடங்கள், சமுதாயக் கூடங் கள், துணை சுகாதார நிலையங்கள் என 10 கோடியே 90 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவிலான முடிவுற்றப் பணிகள்;

**உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில்,** பல்லடம் சேமிப்புக்கிடங்கில் 2 கோடியே 36 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் கூடுத லாக 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு;

**நீர்வளத் துறை சார்பில்,** காங்கயம் வட்டம், வீரணம்பாளையம், காட்டுநாயக்கன்பாளையம் அருகில் வட்டமலைகரை ஓடையில் 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் தடுப்பணை;

**மகளிர் திட்டம் சார்பில்,** தளி பேரூராட்சி, திருமூர்த்தி மலை பஞ்சலிங்கஅருவி செல்லும் வழியில் 10 இலட்சம் ரூபாய் செலவில் 1 தற்காலிக மதி அங்காடி;

**தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில்,** திருப்பூர் திருமுருகன் பூண்டி நகராட்சி பகுதியில் 39 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் மினி டைடல் பூங்கா;

**வனத்துறை சார்பில்,** சின்னார், மனுப் பட்டி, காங்கயம் ஆகிய இடங்களில் 20 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் வனச்சோதனை சாவடிகளில் முன் கள பெண் வன ஊழியர்களுக் கான உள்கட்டமைப்பு வசதிகள், அமராவதி வனச்சரகத்தில் 11 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் வனக்காவலர் குடியிருப்புகள்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத் துறை சார்பில்,** அவிநாசி அரசு மருத்துவ மனையில் 6 கோடி ரூபாய் செலவில் தாய் சேய் நலப் பிரிவுக் கட்டடம், 15.வேலம்பாளையத்தில் 48 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் புதிய அரசு மருத்துவமனை, 50 இலட்சம் ரூபாய் செலவில் குன்னத்தூர் வட்டார பொது சுகாதார அலகு, பள்ளபாளையம், அங்கேரிபாளையம், ஈ.ஆர்.பி.நகர் ஆகிய இடங்களில் 90 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையக் கட்டடங்கள்;

**பால்வளத் துறை சார்பில்,** தளவாய்ப்பட டணம் மற்றும் தண்ணீர்பந்தல் பாளையம் ஆகிய இடங்களில் 65 இலட்சம் ரூபாய் செல வில் தொகுப்பு பால் குளிர்விப்பு நிலையங்கள்;

என மொத்தம், 949 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் 61 முடிவுற்றப் பணிகளை முத லமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

**திருப்பூர் மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப் பட்ட பணிகளின் விவரங்கள்:**

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சின்னக்காம்பாளையம் பேரூ ராட்சியில் 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப் பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம், கன்னிவாடி பேரூராட்சியில் 5 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் ஆதாயங்களை மேம்படுத்து தல், குன்னத்தூர் பேரூராட்சியில் 3 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள், ருத்ராவதி பேரூராட்சியில் 1 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள்;

திருப்பூர் மாநகராட்சியில் 58 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயிரி எரிவாயு கலன்கள் மற்றும் 46 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரதான அலுவலகக் கட்டடம்;

பேரறிஞர் அண்ணா மத்திய பேருந்து நிலை யம் மற்றும் கூடுதல் பேருந்து நிலையங்களில் 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள், அண்ணாநகர் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அமராவதி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு புதுப்பையில் 13 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில்,** அவினாசி, தாராபுரம், குடிமங் கலம், குண்டடம், மடத்துக்குளம், மூலனூர், பல்லடம், பொங்கலூர், திருப்பூர், உடுமலைப் பேட்டை, ஊத்துக்குளி, வெள்ளகோவில் ஆகிய இடங்களில் 19 கோடியே 51 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள் மேம் படுத்தும் பணிகள், நல்லம்மாள்புரம் மற்றும் மேட்டுப்பாளையத்தில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடங்கள் மற்றும் உணவுக் கூடங்கள் அமைக்கும் பணிகள்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத் துறை சார்பில்,** உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் 23 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர சிகிச்சைப்பிரிவுக் கட்டடம், ரங்க சமுத்திரம், சுண்டக்கம்பாளையம், சின்னபொம் மன்சாலை, பெருமாநல்லூர், எ.வடுகபாளையம் ஆகிய இடங்களில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் துணை, ஆரம்ப மற்றும் பொது சுகாதார நிலையக் கட்டடங்கள்;

**வேளாண்மைத் துறை சார்பில்,** சாமளா புரம்பல்லடத்தில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட் டில் துணை வேளாண்மை விரிவாக்க மையம்;

என மொத்தம், 182 கோடியே 06 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

திருப்பூர் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்:

**வருவாய்த் துறை சார்பில், 10,157 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட் சித்துறை சார்பில்,** 1,191 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகள், மகளிர் திட்டத்தின் கீழ், 722 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழு வங்கி கடன்கள் மற்றும் சுழல் நிதி வழங்குதல், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், 55 பயனாளி களுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர் பாசனத்திட்டம், மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், 1,212 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், 45 பயனாளிகளுக்கு பயனாளிகளுக்கு தனிநபர் வன உரிமை ஆவணங்கள், 25 பயனாளிகளுக்கு விவசாய வன உரிமை ஆவணங்கள்,

**வேளாண்மைத் துறை சார்பில்,** 600 பய னாளிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில், 85 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், தேய்ப்பு பெட்டிகள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 65 பயனாளிகளுக்கு பரிசல் வழங்குதல், நுண்கடன் வழங்குதல், தொழிலா ளர் நலத் துறை சார்பில், 388 பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை, பணியிடத்து விபத்து மரண உதவித் தொகை, ஓய்வூதியம்,

**தாட்கோ சார்பில்,** 147 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்கு டியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம், நரிக் குறவ மக்களுக்கு சங்கங்களின் மூலமாக கடனுதவி, தூய்மைப் பணியாளர்களுக்கு கடனு தவிகள், இயற்கை மரணம், ஈமச் சடங்கு, கல்வி, மகப்பேறு ஆகியவற்றிற்கு உதவித் தொகைகள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரி யத்தின் சார்பில், 179 பயனாளிகளுக்கு அனை வருக்கும் வீடு திட்டத்தின் கீழ் ஆணைகள்,

**வேளாண்மைப் பொறியியல் துறை சார் பில்,** 75 பயனாளிகளுக்கு பவர் டில்லர், பவர் வீடர், தென்னை மட்டை தூளாக்கும் கருவிகள், ரோட்டோவேடர், ஆழ்துறை கிணறு மற்றும் பண்ணை குட்டை அமைத்தல், குறு, சிறு மற் றும் நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பில், 33 பயனாளிகளுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், கலைஞர் கைவினை திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 3,462 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள்,

**மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில்,** 43 பயனாளிகளுக்கு திறன்பேசிகள், பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பேட்டரி வீல் சேர்கள், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், கூட்டுற வுத் துறை சார்பில், 1,239 பயனாளிகளுக்கு பயிர்க்கடன், சுய உதவிக் குழு கடன், மத்திய காலக்கடன், வீட்டு அடமானக் கடன், நகை பயிர்க்கடன், கால்நடை பராமரிப்புக் கடன், தானிய ஈட்டுக் கடன், மாற்றுத் திறனாளி கடன், டாம்கோ கடன், பால்வளத் துறை சார்பில், 62 பயனாளிகளுக்கு மேக கணினி பால் பகுப் பாய்வு கருவிகள், பால் கொள்கலன் குளிர்விப்பான்கள்; என பல்வேறு துறைகளின் சார்பில், 295 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 19,785 பய னாளிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், வீட்டுவசதி மற்றும் நகர்ப் புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச் சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச் சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், நாடாளு மன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. மனிஷ் நாரண வரே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக 15 வேலம் பாளையத்திலிருந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் கே. செல்வ ராஜ், திருமுருகன்பூண்டி நகராட்சியிலுள்ள திருப்பூர் மினி டைடல் பூங்காவிலிருந்து தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த கத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.